## ஆத்தூர் நகராட்சி, ஆணையாளர் அவர்களின் செயல் முறைகள்
## முன்னிலை – திரு.அ.வ.சையத்முஸ்தபாகமால்,பிஎஸ்.சி,

ந.க.எண். 3815/2023/எப்1. நாள். 23.02.2024.

பொருள் : மனைப்பிரிவு – ஆத்தூர் நகராட்சி – ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பழைய புல எண்–807/1B,2A,2B, வார்டு–எப், பிளாக்–19, நகரளவை எண் –5/3,5/4–இல் அமைந்துள்ள 4.68 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை :

1. திரு.கே.ராசு & வெ. செந்தில்குமார் என்பவர்களின் விண்ணப்பம் நாள்.15.11.2023.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் கடித ந.க.எண். SLM/ARC1AM5X/14406/2023/TCP, நாள்.30.10.2023
3. நகரமன்ற தீர்மான எண்.842 , நாள்.30.11.2023.
4. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு நாள்.04.01.2024.

****

**உத்தரவு:**

பார்வை 1–இல் காணும் தங்களின் விண்ணப்பத்தில் ஆத்தூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள பழைய புல எண்–807/1B,2A,2B, வார்டு–எப், பிளாக்–19, நகரளவை எண் –5/3,5/4–இல் அமைந்துள்ள 4.68 ஏக்கரில் அமைந்துள்ள 90 மனைகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்க கோரியுள்ளீர்.

பார்வை 2–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், சேலம் அவர்களின் கடிதத்தில் ஆத்தூர் நகராட்சி பகுதியில் உள்ள பழைய புல எண்–807/1B,2A,2B, வார்டு–எப், பிளாக்–19, நகரளவை எண் –5/3,5/4–இல் அமைந்துள்ள 4.68 ஏக்கரில் அமைந்துள்ள 90 மனைகள் அமைப்பதற்கு பல்வேறு நிபந்தனைகளுக்குட்பட்டு SWP/DTCP/SALEM/SVB-DIVISION NO.256/2023, நாள். 30.10.2023 , Roc No. SLM/ARC1AM5X/14406/2023/TCP, நாள்.30.10.2023–ல் என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி அளிக்கப்பட்டு இறுதி ஒப்புதல் வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பார்வை 3–ல் காணும் இந்நகர்மன்ற தீர்மான எண்.842, நாள். 30.11.2023.–ல் மனைப்பிரிவுகளில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ளவும் மனைகளுக்குண்டான கட்டணத்தை செலுத்திய பின்னர் இறுதி ஒப்புதல் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 4–இல் காணும் இவ்வலுவலக அறிவிப்பில் கூராய்வு கட்டணம் மனை ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் 90 மனைகளுக்கு ரூ.90000, மற்றும் மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.94965/– /–ஐ உரிய தலைப்புகளில் செலுத்த அறிவிப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து கூராய்வு கட்டணம் மனை ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் 90மனைகளுக்கு ரூ.90000/– மற்றும் மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.94965/–ஆக மொத்தம் ரூ.1,84,965/. இவ்வலுவலக கருவூலத்தில் செலுத்தியுள்ளார்.(பற்றுச்சீட்டு எண்.045/01/3/23.24/0002792 நாள்.06.02.2024)

எனவே, கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு குடியிருப்பு மனை பிரிவிற்க்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

| Online Registration No. | Village | Ward | Block No. | T.S.No / R.S.No | Plot No. | Extent In(ACRE) |
|---|---|---|---|---|---|---|
| EIVLD0MJ | ATTUR | F | 19 | 807/1B,2A,2B 5/3,5/4 | 1 to 90 | 4.68 |

**நிபந்தனைகள்**

1. அரசாணையின்படி, குடியிருப்பு மனைப்பிரிவிற்கு மட்டுமே இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.
2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் இம்மனைக்கு / குடியிருப்பு மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் ஆணை எந்தவித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
3. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA–1) நாள்.04.02.2019–ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
4. அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA–1) நாள் 31.01.2020–ன் படி நிபந்தனைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனையிட வரைப்படத்தினை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனை உட்பிரிவின் நுழைவாயிலில் 6x4அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. நீதிமன்ற வழக்குகள் ஏதேனும் நிலுவையில் இருப்பின் இத்துறையின் அனுமதி செல்லதக்கதல்ல.
7. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
8. இம் மனைப்பிரிவுகளில் உள்ள மனையில் கட்டிடம் கட்டப்படுமாயின் இவ்வலுவலகத்தில் அனுமதி பெறப்பட வேண்டும்.
9. இம் மனைப்பிரிவில் உள்ள சாலைகளில் கம்பிவேலிகள்/ சுற்றுச்சுவர்கள் அமைத்திருந்தால் உடனே அகற்றிட வேண்டும்.
10. அரசாணை எண்.18 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.09.12.2020–இன் படி நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும்,

23/2/24

ஆணையாளர்,
ஆத்தூர் நகராட்சி

23/2/24

**பெறுதல்**

திரு.கே.ராசு & வெ. செந்தில்குமார்
1 /801 காட்டுக்கோட்டை,
தியாகனூர்,தலைவாசல்,
சேலம்.

**நகல்:** சார் பதிவாளர், ஆத்தூர்,( பத்திரப் பதிவு மேற்கொள்வதற்காக )
**நகல்:** நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம்.(தகவலுக்காக)